உம்மாலே எல்லாம் கூடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதும் -2
உங்க கிருபையே உங்க கிருபையே
என்னை தாங்கி நடத்தினதே -2
(உம்மாலே)

அலை மோதும் வாழ்வில்
அசையாமல் நிற்க
நங்கூரமாக இருப்பவரே -2
காற்றையும் கடலையும் அதட்டி
அமைதி படுத்தின உம் கிருபையே -2
(உங்க கிருபை) (உம்மாலே)

கரடுமுரடான பாதைகளில்
வெளிச்சமாக என்றும் இருப்பவரே -2
வழிகளில் எல்லாம் தூதரை அனுப்பி
காப்பதும் உங்க கிருபையே -2
(உங்க கிருபை) (உம்மாலே)